அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 271/2023

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

பி.சா.1 25.02.2026

பெயர் ஜெயராஜ் தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>:–

1. Rental Receipts Original EXB1

2. Legal Notice to Greater Chennai corporation dated 25.05.2023 Court Certified copy EXB2 ( வாதி தரப்பு வழக்கறிஞர் கார்பரேசனுக்கு நோட்டிஸ் அனுப்ப அவசியம் இல்லை என்று ஆட்சேபனை செய்யப்பட்டது, பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் பிரதிவாதி வழக்கு சொத்தில் அனுபவத்தில் இருந்தபோது கார்பரேசன் இடையூறு செய்யக்கூடாது என்பதற்காக நோட்டிஸ் அனுப்பியதாக கூறினார். ஆட்சேபனையுடன் ஆவணம் குறியீடுசெய்யப்பட்டது.)

3. Acknowledgement card dated 29.05.2023. Court Certified copy EXB3

குறுக்கு விசாரணை:–

1. வா.சா.ஆ 5 28.08.2023 தேதியிட்ட வழக்கறிஞர் நோட்டீஸ் நான் பெற்றேனா என்றால் வாங்கினேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கடையை காலிசெய்யவேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்தார்கள். நான் அதற்கு பதில் நோட்டீஸ் கொடுத்தேனா என்றால் சிறிய காலத்திற்கு பிறகு கொடுத்தேன். எனது பதில் நோட்டிஸ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கோரியவாறு நோட்டிஸ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ 5 நோட்டிஸ் ல் புதியவாடகை சட்டப்படி நானும் வாதியும் சேர்ந்து கட்டாயம் வாடகை ஒப்பந்தம் பதிவு செய்யப்படவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் பார்க்கவில்லை. அதற்காக தான் நோட்டிஸ் அனுப்பப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நோட்டிஸ் கொடுத்தபிறகும் நான் வாடகை ஒப்பந்தம் புதியவாடகை சட்டப்படி பதிவு செய்யவரவில்லை என்பதால் தான் வாதி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. வாதி என்னை ஒப்பந்தம் போட அழைக்கவில்லை. எனக்கு வியாபாரம் செய்ய 100 சதுரஅடி ஒதுக்கப்பட்டது. நான் கொடுக்கப்பட்ட 100 சதுரஅடியில் வியாபாரம் செய்கிறேனா என்றால் என்கடைக்கு வெளியேவும் வியாபாரம்செய்கிறேன். அவ்வாறு வெளியே வியாபாரம் செய்து ஆக்கிரமிப்பு செய்கிறேன் என்றால் சரியல்ல. 30 முதல் 40 சதுரஅடியில் ரோடுபகுதில் பொருட்கள் வைத்துள்ளேன். கடையும் ரோட்டில் தான் உள்ளது.

3. எனக்கும் வாதிக்கும் தற்போது வாடகை ஒப்பந்தம் நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. எனவே எனக்கும் வாதிக்கும் வாடகைதாரர்

உரிமையாளர் உறவு இல்லை என்றால் இல்லை ஆனால் நான் வாடகை கொடுத்துவருகிறேன். வாடகை ஒப்பந்தம் இல்லாமல் கடையை ஆக்கிரமிப்பு செய்து கடையை நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது பிரமாணவாக்குமூலத்தில் வாடகை ஒப்பந்தம் புதுப்பிக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றாலும் எனவே தாவா சொத்து நான் இருக்க தகுதிஇல்லை என்றால் ஒப்பந்தம் இல்லை என்பது உண்மை தான். தாவா சொத்தை நான் காலிசெய்து நான வாதியிடம் கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல அதுதான் எனது வாழ்வாதாரம்.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.